# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்

# ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

# MCOP No.4007/2024

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | எமசா1 |
| பெயர் | கமலக்கண்ணன் |
| க/த.பெயர் | பாலசுந்தரம் |
| வயது | 35 |
| விலாசம் | பேரம்பாக்கம், திருவள்ளூர் |
| தொழில் | துணை மேலாளர் |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 17.07.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன். எங்கள் நிறுவனத்தில் வழங்கிய அதிகாரமளிப்பு கடிதம் எமசாஆ1, காப்பீடு நகல் எமசாஆ2, லீகல் நோட்டீஸ், போஸ்டல் ரிசிப்ட் எமசாஆ3.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை நான் நேரடியாக விசாரிக்கவில்லை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை

1ம்எதிர்மனுதாரர் மீது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த காப்பீட்டு ஒப்பந்தம் 1ம் எதிர்மனுதாரருக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் மட்டுமே பொருந்தும் என்றால் சரிதான். மனுதாரர் 3ம்தரப்பினர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். 1ம்எதிர்மனுதாரர் சார்பாக 2ம்எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

**5 வது நீதிபதி**
**சென்னை**